# கவியோகி சுத்தானந்த பாரதியாரின் கடிதங்கள்

கவியோகி மகரிஷி சுத்தானந்த பாரதியார் ஜயந்தி தினம் இன்று. இரண்டு ஆண்டுகளுக்குமுன் இவர் மகா சமாதியடைந்தபோது "அமுதசுரபி" மாதஇதழின் ஆசிரியத் தலையங்கம் இவரைப்பற்றி எழுதிய வாசகத்தினை இன்று நினைவுகூருவது மிகப் பொருத்தமாக அமையும்.

"கவியோகி டாக்டர் சுத்தானந்த பாரதியார் நம்மைவிட்டுப் பிரிந்து திருவள்ளுவரும், கம்பரும், பாரதியும், நாயன்மார்களும், ஆழ்வார்களும், சங்கப் பெரும் புலவர்களும், ஐம்பெரும் காப்பியம் படைத்த மாகவிஞர்களும் வாழும் உலகிற்குச் சென்றுவிட்டார்."

தமது எண்ணற்ற அபிமானிகளிடமிருந்து வரும் கடிதங்களுக்கு அவ்வப்போதே பதில் எழுதுவதை விரதமாகக்கொண்டவர் சுவாமி சுத்தானந்தர்.

சுவாமிகளின் கடிதம் ஒவ்வொன்றும் உங்களுடன் பேசும், உள்ளொளி வீசும், வாழ்வை உயர்த்தும். சுவாமிகள் எழுதிய பல்லாயிரம் கடிதங்களிலிருந்து ஐந்து கடிதங்களைமட்டும் உங்களுடன் பேசவைக்கிறோம். அவை உள்ளொளி வீசி உங்கள் வாழ்வை உயர்த்தட்டும். . .

சுவாமிகளின் "உலகப் பொதுநெறி" உங்களை வழி நடத்தட்டும்.

அன்பே நிறைக... அருளே பொழிக ... ...

11-05-1992 — மில்க்வைற்

# அருட்பெரியார்

அருட்பெரியார் அடங்கியிருப்பர். அவர்களுடைய காந்த சக்தியே உலகின் உள்ளத்தை கவர்கிறது. தேன் மலருக்கு தேனீக்களும், கனி மரங்களுக்கு புட்களும், தாமரைக் குளத்திற்கு அன்னமும் வருவது இயற்கை அதுபோல் பரமஞானிகளை ஆர்வம்கொண்ட ஆன்மாக்கள் அணுகுவதும் இயல்புதான். தியான வாழ்வு, மோனப்புன்னகை, கருணை உள்ளம், கலங்கா உறுதி, சமநோக்கம், தியாக தீரம், இவை பெரியார் இயல்பு. உலகம் அருட்பெரியாரால் இந்த மட்டாவது உருப்படியாயிருக்கிறது. கண்ணன், புத்தன், லௌத்சன், கொன்புத்ஸன், சோக்ரதன். கிறிஸ்து, பிரான்ஸிஸ், சங்கரர், ராமானுஜர், மத்வர், சைதன்யர், நானகர், இராமதாஸர், அப்பர், சம்பந்தர், மாணிக்கவாசகர். நம்மாழ்வார், பரமஹம்சர், விவேகானந்தர், தாயுமானர், வள்ளலார்போன்ற அருட்பெரியார் உலகத்திற்கு ஞானத்தாலும், அருள்வாக்கினாலும் செய்த உதவி அளப்பரியது. ஆனால் உலகம் அவர்களைப்படுத்திய பாடும் பயங்கரமானது. உதவி செய்த நல்லாருக்குச் சிலுவையும், கல்லெறியும், உதையும், வசவும், சிறையும் தந்தது உலகம்.

கவியோகி சுத்தானந்தபாரதியார் அவர்கள் அருளிய

# உலகப் பொதுநெறி

அறிவே யான்மா
ஆண்டவ னொருவன்
இன்பவீ டுள்ளம்
ஈவிரக் கங்கொள்
உலகெலாம் கோயில்
ஊருக் குதவு
எண்ண முயர்த்து
ஏக்கந் தவிர்த்தெழு
ஐந்தை யடக்கியாள்
ஒழுக்கமே உயர்வு
ஓமே மந்திரம்
ஔடதம் அமைதி
அஃகுக அகந்தை
கற்பது கடமை
காதலே வாழ்க்கை
கிளைவிரிந் தோங்கு
கீர்த்தி பெறவாழ்
குலநலம் பேணு
கூற்றிற் கஞ்சேல்
கெடுநினை வறுக

கேண்மை வளர்க
கைக்கணி யுழைப்பாம்
கொலைபுலை பாவம்
கோள்பொய் கொடிது
கௌரவம் பெறநட
ஙப்போல் உதவு
சத்தியம் வெல்லும்
சாந்தம் மகிழும்
சித்த நிலைகாண்
சீவனிற் சிவங்காண்
சுத்தமே கடவுள்
சூரிய நிலையறி
சென்மப் பயன்பெறு
சேயே தேயம்
சைனியம் ஒருமை
சொல்லைப் போற்று
சோற்றைப் பகுத்துண்
சௌமிய முயிரு
ஞாலம் காலத்தேர்
×ஞிமிறு போலுழை

x வண்டு

ஞேயம் ஆன்மா
ஞையெனச் செய்யேல்
தன்மதிப் பகலேல்
தாய்மொழி மறவேல்
திருத்துக தன்னை
தீரன் எனவாழ்
துணிந்து நலஞ்செய்
தூயரோ டிணங்கு
தெவிட்டா தறஞ்செய்
தேர்ந்து வினைசெய்
தைரியங் கைவிடேல்
தொண்டே தொழுகை
தோட்டப் பயிர்செய்
தௌவை சோம்பல்
நம்பி நலஞ்செய்
நாட்டது போற்று
நினைப்பே நடப்பு
நீப்பன நீக்கு
நுண்கலை இனிது
நூலறிந் தொழுகு
நெசவுத் தொழில்வளர்
நேரத்தைப் பொன்செய்
நைச்சிய வுரைசொல்
நொந்தவர்க் குதவு
நோயுடன் உண்ணேல்
நௌவிபோல் இயங்கு

பலவித முலகு
பார்வையுள் ளாக்கு
பிரிவினைக் கிணங்கேல்
பீடையை விலக்கு
புவிப்பயன் பொதுவாம்
பூவென மகிழ்வோம்
பெண்மை சக்தி
பேராசை தீது
பைம்புல னுலவு
பொதுநெறி போற்றிவாழ்
மனமே மனிதன்
மாசறு தவஞ்செய்
மிடிப்பிணி நீக்கு
மீத்துச் செலவிடு
முருகெழி லோங்கு
மூச்சைச் சமன்செய்
மெய்த்திற னோங்கு
மேதை யெனவாழ்
மையலை மாற்று
மொழிபல பழகு
மோசம் போகேல்
மௌனம் விரும்பு
யாக்கை மனையாம்
யோகவீ றோங்கு
இராப்பகல் எண்ணு
இருவினை பற்றேல்

